# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

10வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 APRIL 01, 2001 பாலம் 07



❊ யோகாசனம் உடல் நலத்தை காக்குமா? (பக். 13)

❊ வாகனம் வாங்குவதா/ குத்தகைக்கு பெறுவதா நல்லது? (பக். 03)

❊ வேகம் மீறுபவர்களைக் கண்காணிக்கும் கருவி? (பக். 4)

❊ கோமாரி நோய் கனடாவில் பாதிப்பை ஏற்படுத்துமா? (பக்.02)

❊ சுவர்களில் வரையப்பட்டிருக்கும் கிறுக்கல்களிலுள்ள தகவல்? (பக். 9)

❊ இங்கிலாந்தின் கஸ்டகாலம் (பக். 6)

❊ மோட்கேஜ் வட்டிவீதம் மேலும் இறங்குமா? (பக். 17)

❊ குறுகியகால / நீண்டகால மோட்கேஜ் எது சிறந்தது? (பக்.17)

❊ தீ மிதித்தல் தமிழர் கலாச்சாரமாகுமா? (பக். 5)





RE/MAX®
Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

MEMBER OF RE/MAX HALL OF FAME

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270



இழந்த தலைமுடியை மீண்டும் பெற
வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA
& Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough


அனைவருக்கும்

## சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

- Vlambaram Publications

*உலக நாடுகள் வரிசையில்*

## ரொன்ஹா (TONGA)

தென்பசுபிக் சமுத்திரத்தில் உள்ள மிகமிகச் சிறிய தீவுகள் ஒன்று சேர்ந்து உலக வரைபடத்தில் ஒரு நாடாகக் கருதப்படுகின்றது. அதாவது "ஹிங்டம் ஒவ் ரொன்ஹா" (Kingdom of Tonga) என்னும் பெயரில் அழைக்கப்படும்.

பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளில் "The Friendly Islands" என்று குறிப்பிடப்படும் தீவுகளில் இதுவும் ஒன்றாகும். உலக வரைபடத்தில் கண்ணுக்குத் தெரியாத மாதிரி ஒரு சிறு புள்ளி போலவே இந்நாடு அமைந்துள்ளது.

அமெரிக்காவிலேயோ அல்லது கனடாவிலேயோ இந்நாட்டுக்கான தூதராலயம் எதுவும் இல்லை. பிஜி நாட்டுத் தூதராலயத்தின் மூலமே இந்நாட்டுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இங்கிலாந்தில் உள்ள சர்வதேச தொடர்புகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது.

மொத்த நிலப்பரப்பு: 277 சதுர மைல்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

அண்மையில அவுஸ்திரேலியா/நியூசிலாந்திலிருந்து வந்திருந்த சில நண்பர்களை சந்தித்தேன். அவர்களுடன் பழகிய சில நாட்களில் கனடாவில் உள்ள சமுதாயத்தைப் பற்றி அங்கு வாழ்பவர்களின மனக்கிடக்கையை அறியக்கூடியதாக இருந்தது. அவர்களின் நோக்கில் கனடாவில் இருப்பவர்கள பஞ்சமா பாதகங்கள் செய்வதில் வல்லவர்கள என்பதாகும்.

இது அவர்களின் தவறல்ல. அவர்களிற்குக் கிடைக்கும் தகவல்கள் அவ்வாறே கிடைக்கின்றன. பல நல்ல விடயங்கள் இருக்க, ஒரு சில கூடாத விடயங்களே அங்கு சென்றடைகின்றன. அவர்கள் என்னுடன பழகிய நாட்களில், இங்குள்ள தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றத்தையும் தமக்கென ஒரு உயர்வான / நிலையான இடத்தை அடைய எடுத்துக்கொண்டிருக்கும் நல்ல முயற்சிகளைக் கண்கூடாகக் கண்டு பெருமிதம் அடைந்துள்ளார்கள். ஒரு சிலரின் செயற்பாடுகள இங்குள்ள அனைவரையும் ஒரே தராசில் நிறுக்கின்றது. இது சரியோ? தவறோ? ஒரு பானை சோற்றை அழிக்க ஒரு துளி விசம் போதும் போல் தோன்றுகின்றது. தங்கள் தவறுகளைத் தாங்களே திருத்தினால சமுதாயமே திருந்திவிடும். நல்லதை௯ேய சிந்திப்போம். நல்லது நடக்கும்.

-நெற்றிக்கண்ணன்




SINGAPORE CELLUAR

$29.00
Mon. - Fr. 6:00 p.m to 8a.m FREE
Sat. & Sun. FREE & Much More

$49.00
3 Months Service
Numeric + Voice
+ Activation FREE PAGER

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display
per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234





சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள். மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

LIBERTY MUTUAL

© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (77)



-விஜே குலத்துங்கம்

கடந்த சில வாரங்களாக பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் போன்றவற்றில் எல்லாம் பெரிதாகப் பேசப்படும் விடயம் தான் இங்கிலாந்திலும் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் கால்நடை விலங்குகளில் தோன்றியுள்ள **FMD** என்று கூறப்படும் **FOOT AND MOUTH DISEASE** என்ற நோயாகும். தமிழில் இதைக் கோமாரி நோய் என்று கூறுவார்கள். இது வரையிலும் இந்த நோய் வட அமெரிக்கா, பனாமாவிற்கு மேலாகவுள்ள மத்திய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, ஸ்கன்டினேவியன் நாடுகள் தவிர்ந்த மற்றைய நாடுகளில் காணப்படுகின்றன என கூறப்பட்டது. இதன்படி ஐரோப்பிய ஒன்றியத்தை சார்ந்த நாடுகளில் இல்லை எனக் கூறப்பட்டாலும், அண்மையில் இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்சு நாடுகளில் இந்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டள்ளது. இந்த நோய் அமெரிக்காவில் கடைசியாக 1929 இலும், கனடாவில் 1952 இலும், மெக்சிகோவில் 1954 இலும் தோன்றியது எனக் கூறப்படுகின்றது.



இந்த நோய் இங்கிலாந்தில் பரவவியதும், அதைத் தொடர்ந்து கனடாவில் அங்கிருந்து இறக்குமதியாகும் பச்சை இறைச்சி வகைகள், மற்றும் **pasteurize** பண்ணாத பாலிலிருந்து தயாரிக்கப்படும் சீஸ் வகைகள் ஆகியன தடைசெய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து பலர் இந்த நோய் மனிதர்களை தாக்குமா என அஞ்சத் தொடங்கியுள்ளனர். எம் இன மக்கள் மாட்டிறைச்சி அதிகமாக உண்பதில்லை என்றாலும். மாட்டிறைச்சியில் இருந்து தயாரிக்கும் **Hamburger** ஐ உண்பார்கள். ஆனால் இந்த நோய் மனிதர்களை தாக்கமாட்டாது. மனிதர்கள் இயற்கையாக இந்த நோய்க்கு எதிர்க்கும் சக்தி உடையவர்கள்.

இங்கிலாந்தில் கடைசியாக இந்த நோய் 1981 இல் தோன்றியது. ஆனால் பெரிய அளவில் நோய் பரவியது 1967 இல் தான். இதன்போது 2,364 விலங்குகளில் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு ஏறக்குறைய 442,000 விலங்குகள் அழிக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டு 200 மாடுகளும் 369 பன்றிகளும் அழிக்கப்பட்டன. இந்த நோயினால் 1967,1968 களில் இங்கிலாந்திற்கு 150 மில்லியன் பவுண்கள் நட்டம் ஏற்பட்டது. விவசாயிகளுக்கு நட்ட ஈடாக 27 மில்லியன் பவுண்கள் கொடுக்கப்பட்டன.

இந்த **FMD** அல்லது கோமாரி நோயானது ஒரு வைரசினால் உண்டாக்கப்படுகின்றது. இந்த வைரசின் தாக்கம் **PH** அளவு 5 இக்கு குறைவாக இருக்கும் போது அதாவது அமிலத் தன்மையாக இருக்கும் போதும், சூரிய வெளிச்சம் அதிகமாக உள்ளபோதும், வறண்ட சூழ்நிலையிலும் குறைவாகக் காணப்படும். ஆனால் பூச்சியத்துக்கு அண்மையான வெப்பநிலையிலும், குளிரான காலநிலையிலும் இந்த வைரசு நீண்ட காலம் உயிர் வாழ்வதால் நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதனால் மற்றைய உலர்ந்த வெப்பநிலை அதிகமான நாடுகளில் நோய் காணப்பட்டாலும், பெரிய அளவில் பரவுவதில்லை. இங்கிலாந்து குளிரான ஈரமான நாடு என்பதால் நோய் விரைவாக பரவியுள்ளது.

இந்த நோய் தொடுகை மூலம் பரவும் ஒரு நோயாகும். நோயுள்ள மிருகங்களின் அசைவினாலும் இவை பரப்பப்படுகின்றன. அதிகமான சந்தர்ப்பங்களில், பண்ணைகளில் இருந்து தூர இடங்களுக்கு **Truck** களிலும், புகையிரதங்களிலும், இறைச்சி வெட்டப்படும் இடங்களுக்கு இந்த விலங்குகள் கொண்டு செல்லப்படும் போது அந்த இடங்களுக்கும், நாடுகளுக்கும் நோய் பரவுகின்றது. அத்துடன் இறைச்சிகள், மற்றும் உற்பத்திப் பொருட்கள் மூலமும் நோய் பரவலாம். உணவுப் பொருட்கள் கூடுதலாக மனிதராலேயே உண்ணப்படுகின்றது. ஆனால் மனிதர்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் மீதமான உணவுகளும், பழுதடைந்த இறைச்சிகளும் பன்றிகளுக்கு உணவாகப் போடப்படுவதால் பன்றிகளுக்கு இந்த நோய் பரவுகின்றது. பின்னர் பன்றிகளில் இருந்து மற்ற விலங்குகளுக்கு இது பரவுகின்றது.

இந்த வைரசு ஒரு விலங்குகளுக்கு தொற்றி அது பெருக எடுக்கும் காலம் அல்லது **Incubation period** 2 - 21 நாட்களாகும். சராசரியாக அதிகமான சந்தர்ப்பங்களில் இது 3 தொடக்கம் 8 நாட்கள் இருக்கும். ஆனால் இந்த நோயின் அறிகுறிகள் தென்படமுன்னர், வைரசுக்கள் உடலை விட்டு வெளியேறி விடும். எனவேதான் ஒரு பண்ணையில் ஒரு விலங்கில் அறிகுறிகள் தென்பட்டால், மற்றைய விலங்குகள் எல்லாவற்றையும் இறைச்சிக்காக வெட்டி விடுவார்கள். அல்லது எரித்து அழித்து விடுவார்கள். இதனாலேயே இங்கிலாந்தில் ஏற்கனவே 300,000 விலங்குகள் அழிக்கப்பட்டு விட்டன. மேலும் 200,000 விலங்குகள் அழிக்கப்படுகின்றன.

இந்த நோயின் அறிகுறிகளாவன விங்குகளின் வாயில் இருந்து உமிழ்நீர் வடிவதும், அத்துடன் விலங்குகள் உணவு உண்ணாமல் இருப்பதும், நடக்க முடியாமல் போவதும் ஆகும். உதடுகள், நாக்கு, முரசு, நாசித் துவாரங்கள், முலைகள், பாதங்கள் போன்றவற்றில் கொப்புளங்கள் உண்டாவதே இதற்குக் காரணமாகும். செம்மறியாடுகளிலும், பன்றிகளிலும் அறிகுறிகள் குறைவாகவே காணப்படும்.

இதனுடன் சம்பந்தமாக இன்னுமொரு சுவாரசியமான செய்தி என்னவென்றால் அவுஸதிரேலியாவில் கங்காருவின் இறைச்சியை உண்ணும் பழக்கம் ஐரோப்பாவிலும் பெருகி வருவதாகும். கங்காருவின் இறைச்சி மலிவானதும், கொழுப்பு மிகவும் குறைந்த இறைச்சியுமாகும். அத்துடன் கங்காருவிற்கு நோய்களும் வருவதில்லை. அவுஸ்திரேலியாவில் தானாகவே மிக அதிகளவில் பெருகி வரும் இனம்தான் கங்காரு ஆகும். சென்ற வருடம் ஜேர்மனி, பெல்ஜியம், டென்மார்க், பிரான்சு ஆகிய நாடுகளுக்கு அவுஸ்திரேலியா 5 மில்லியன் கிலோகிராம் கங்காரு இறைச்சியை ஏற்றுமதி செய்தது. இப்போது இந்த **FMD** நோயின் பின்னர் ஏற்றுமதி 20 வீதத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



கனடாவில் இந்த **FMD** நோய் இன்னும் தோன்றவில்லை. ஆனால் நோய் தொற்றுமாயின் கனடாவின் பொருளாதாரம் 20 பில்லியன் டொலர்களால் பாதிக்கப்படும்.


"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijey@ hotmail.com என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

புதிய இடத்தில்

☎: (416) 267-0408



### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 117

**இடமிருந்து - வலம்**

1. முள் நிறைய உள்ள மரத்தின் இனிமையான பழம் இது
4. இது ஆறுவகை
5. மகன்
6. எதிர்ப்புக்குத் தாராளாமாக இரு(வல-இட)
7. தமிழில் உள்ள 12 பிரிவு சைவ துதிப் பாடல்கள்
9. கட்டுத்தேர் கட்ட இது உதவும்
10. திருமாலின் வதிவிடம்

**மேலிருந்து கீழ்**

1. அரசியல் சாணாக்கியம்
2. கடல்
3. ஜானகி (கீழ் - மேல்)
6. வன்னியில் இருந்து வெளிவரும் பத்திரிகை (கீழ்-மேல்)
8. அன்னை வேளாங்கன்னியின் வதிவிடம் (கீழ் - மேல்)
9. மக்களின் தொகுதி (கீழ் - மேல்)
11. மழை வெய்யில் இரண்டில் இருந்தும் இது மக்களைப் பாதுகாக்கும் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் APRIL 27, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வி | வே | கா | ன | ந் | த | ர் | ■ |
| யா | ■ | ண் | ■ | ■ | ண் | ■ | ல் |
| க் | ■ | டீ | ■ | டி | ட | ட் | கி |
| கி | ணி | ப | கை | ■ | லை | ■ | மு |
| யா | ■ | ன் | சா | ஆ | ■ | உ | ■ |
| ன | ■ | ■ | ■ | ர | | லை | மூ |
| ம் | ட | ஓ | ■ | ம் | ■ | ■ | ப் |
| ■ | ந | டு | ■ | பி | ற | ப் | பு |

**116இல் வெற்றி பெற்றோர்**

1) V. யோகம், Donmills, Ont.
2) K. Muhilan, Scarborough, Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*




## DAYCARE



★ 3 மாதம் - 6 வயதுச் சிறுவர்களுக்குச் சிறந்த பராமரிப்பு.
★ காலை 7.00 மணி - மாலை 6.00 மணிவரை.
★ இருநேர உணவும், பிற்பகல் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
★ வயதுக்கேற்ப கணிதம், தமிழ், ஆங்கிலம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிக்கப்படும்
★ விளையாடத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன.

★கட்டணம்:-
Week - $ 40.00
Day - $ 10.00
1 Hr - $ 1.50



தொடர்புகளுக்கு: 416-335-5578
McCowan / Sheppard
#704, 360 Pitfield Rd.
Scarborough, ON.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing > Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5





## திருமண சேவை



**உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்**

தொலைபேசி: 416 261-6219
Email:ratnam51@hotmail.com



## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.






### விடுகதை

- குரல் கொடுத்து தகவல் தருவான் அவன் யார்? டெலிபோன்
- காலால் மிதித்தால் காற்றாய் உருளும் அது என்ன? சைக்கிள்
- நீலத் தோட்டத்தில் மஞ்சள் பூ அது என்ன? வானம்-நிலா
- கிணற்றைச் சுற்றி வேலி அது என்ன? கண்கள்-கண் புருவம்
- நாலு காலுள்ளவன் நன்றிக்கு வாலுள்ளவன் அவன் யார்? நாய்

## Lease வாகனங்களுக்கு down போடுவதால் உள்ள நன்மை தீமைகள்



நம்மவர்கள் கூடுதலாக வாகனங்கள் வாங்கும் நேரமிது. அவர்களில் அரைவாசி பேர் வாகனங்களை **lease** இல் எடுக்கின்றனர். அப்படி **lease** இல் எடுப்பவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காக எனது **Honda** வாகன விற்பனை நேரத்தில் சிறிது நேரத்தை நம்மவர்களுக்கு ஒதுக்கி இக் கட்டுரையை வரைகிறேன். இங்கு எனது அனுபவத்தைக் கொண்டதும் மனதுக்கு சரியெனப்பட்ட விடயங்களையும் இங்கு தரவுள்ளேன். வியாபாரம் செய்பவர்கள் எந்த யோசனையும் இன்றி **down payment** இன்றி வாகனத்தை குத்தகைக்கு **(lease)** எடுப்பது புத்தி சாலித்தனமான விடயமாகும். ஏனெனில் உங்களால் மாதாந்தம் $650 வரை வரிப்பணத்தில் **(Taxable Income)** கழிக்க முடியும். அதாவது இந்த வருடம் உங்களால் உழைத்து 90,000 வைத்துக் கொண்டால் உங்களின் **Business** செலவுகளுடன் உங்கள் வாகனச் செலவாக (650 x 12 = 7800) கழிக்க முடியும். அதேவேளை வாகனங்களின் **Lease Rate** என்ன என்பதை பொறுத்து உங்களின் காசை **down** போடுவதை தீர்மானிக்க வேண்டும். உதாரணத்திற்கு **lease rate** உங்கள் பணத்திற்கு **Bank** தருவதைவிட குறைவாக இருந்தால் **down** போடாமல் எடுப்பது நல்லது. அதேவேளை கூடுதலாக இருக்கும் இடத்து நீங்கள் பணம் போடுவதன் மூலம் இலாபம் அடையாலம். எல்லாவற்றையும் விட எவ்வளவு **down** போட்டாலும் போடாவிட்டாலும் உங்கள் வாகனம் களவு போனாலோ அல்லது விபத்து ஏற்பட்டும் அதன் பெறுமதியில் கழிக்கப்பட்டாலோ உங்கள் வாகனத்துக்காக போடப்பட்ட **down** பணத்தின் நிலை என்ன? முடிவைக் கேட்டால் தலைசுற்றும். உங்களுக்கு கிடைப்பது அல்லது கிடைக்கப் போவது பூச்சியம் (0) தான். ஆனால் அதேவேளை இது வரை என் மூலம் வாகனங்களைப் பெற்றவர்கள் தாங்கள் போட்ட **down** ஐ பெறக் கூடியதாகவே உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு சோதீஸ் (416) 704 - 1179

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(48)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்தி வீதி ஒழுங்குகளை மீறி தண்டனை ரிக்கற் பெறுவோர் தம்முடைய குற்றச் சாட்டினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று இக் குற்ற சாட்டில் இருந்து தப்பிக் கொள்வது தொடக்கம் அப்பீல் செய்வது வரை பார்த்ததுடன், வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறும் குற்றச் சாட்டுகளில் "கவனமில்லாத வாகனம் செலுத்துதல் **(Careless driving)** என்னும் பிரிவினை கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். இம் முறை வீதி ஒழுங்கு சட்டங்களை மீறும் குற்றச் சாட்டுகளின் அடுத்த குற்றச் சாட்டு ஒன்றுக்கு செல்வோம்.

## வேகமாக வாகனம் செலுத்துதல் (Speeding)

பொதுவாக வாகனம் செலுத்தும் ஒவ்வொரு வீதியிலும், ஆகக் கூடுதலான சட்ட ரீதியான வரையறை செய்யப்பட்ட வேகம் எவ்வளவு என்பது வரையறை செய்யப்பட்டிருக்கும்.

வீதி ஒழுங்கு சட்டத்தின் 128 ஆம் பிரிவின் படி வீதிகளில் வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட அதிகமாக செலுத்தும் ஒவ்வொரு சிறு அதிகரிப்பும் குற்றமாகவே கருதப்படும். வாகன சாரதி ஒருவர் வேகமாக வீதியில் வாகனத்தினை செலுத்திய குற்றச் சாட்டினை அரச வழக்கு தொடுநா குற்றத்தினை பிடித்த பொலிஸ்சாரின் உதவியுடன் மூன்று விடயங்கள் நீதிமன்றத்தில் நிரூபித்தல் வேண்டும்.

1) சாரதி பிடிபட்ட நேரம் சாரதிக்குரிய ஆசனத்திலிருந்து வாகனம் செலுத்தியிருந்தார் என்பது.
2 அந்த நேரம் வீதியல் வாகனம் செலுத்தப்பட்டு கொண்டிருந்தது என்பது.
3) வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட அதிகமாக வாகம் செலுத்தியிருந்தார் என்பது.

எந்தவொரு குற்றச் சாட்டுக்கும் ஏதாவது ஒரு காரணத்தினை பொதுவாகக் குறிப்பிட்டு குற்ற செயலின் வலுதன்மையினை சற்றுக் குறைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட அதிகமாக வாகனம் செலுத்தி பிடிபட்ட ஒருவர் அதற்காக எந்தவொரு காரணத்தினையும் கூறவிட முடியாது.

திரு. அலன். ஈ. ஸ்.கொட் என்பவர் **"Fight the ticket in Ontario"** என்னும் நூலின் ஆசிரியர், நீண்ட பல வருடங்களாக ஆயிரக்கணக்கான வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறிய வழக்குகளை புலனாய்வு செய்ததுடன் இவ் வழக்குளில் அரச வழக்கு தொடுநராகப் பதவி வகித்த அனுபவமுள்ளவர். குற்றச் செயல்களினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று தப்பிக்கும் வழி முறைகள் என்னும் மேற்குறிப்பிட்ட பெயருக்குரிய நூலில் இது தொடர்பாக பின்வருமாறு நகைச் சுவையாக குறிப்பிடுகின்றார். அதாவது!இதில் தப்பிக்க ஒரு வழி! அது இதுவே! சட்ட ரீதியான வரையறையினை விட வேகமாக வாகனம் செலுத்தாமல் இருப்பதுவே நல்ல வழி.

ஆனால் "புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்" என்ற விடயத்தில் மட்டுமே இங்கு தப்பு பண்ணியவர்கள் கவலை கொள்ளும் விடயம் எனவும், அதற்குரிய வழி நீதிமன்றத்தில் குற்றத்தினை ஏற்றுக் கொண்டு தண்டனை பணத்தினை குறைத்து, அதன் மூலம் புள்ளி மதிப்பீட்டு இழப்பினையும் ஓரளவு தவிர்த்து கொள்வதே சாலச் சிறந்தது எனவும் இவ் அனுபவம் உள்ள நூல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் பற்றி வாகனக் காப்புறுதிக் கம்பனிகள் எதுவித அக்கறையும் கொள்வதில்லை. ஆனால் மூன்று வருடங்களுக்கு இடையில் மூன்று முறை வீதி ஒழுங்குகளை மீறிய தண்டனை ரிக்கற் பெற்றால் மட்டும் காப்புறுதி மீளப் புதுப்பிக்கும் போது அதிகரிக்கும் சந்தர்ப்பம் உண்டு. அனேகமாக ஒன்பது புள்ளி மதிப்பீடு அல்லது அதற்குக் கூடுதலாக இழக்கும் போதே சாரதி ஒருவர் தமது வாகனம் செலுத்துவதில் நெருக்கடியினை எதிர் கொள்ள வேண்டிய நிலைமை உருவாகிறது என குறிப்பிடலாம்.

## வேகமாக செலத்தும் வாகனங்களை பிடிக்கும் நவீன் விஞ்ஞான ராடர் கருவி.

அனேகமான ராடர் கருவிகள் இருநூறு மீற்றருக்குள் வரும் வாகனங்களின் வேகத்தினை பதினைந்து மீற்றர் தூரத்தில் துல்லியமாகப் படம் பிடித்துக் கொள்ளும். குற்றச் சாட்டு நீதிமன்ற விசாரணை என்ற நிலைமைக்கு வரும் போது பின்வரும் விடயங்கைளை அரச வழக்கு தொடுநர் நிரூபித்தேயாக வேண்டும்.

1) ராடர் கருவியினை உபயோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட பொலீஸ் உத்தியோத்தர் பயிற்சி பெற்ற தகுதியானவா என்பது.

2) குறிப்பிட்ட ராடர் கருவி துல்லியமாக வாகனங்களின் வேகத்தினை அளவிட கூடியது என்பது.



3) குறிப்பிடப்பட்ட ராடர் கருவி பொலீஸ் உத்தியோகத்தரால் பரிசோதனை செய்யப்பட்டு நல்லா இயங்கும் நிலைமையில் உள்ளது என்பது.

4) இவ் ராடர் கருவியின் மதிப்பீட்டுடன் இக்குற்றச் செயலை பிடித்த பொலீஸ் உத்தியோத்தரின் கண் பார்வை அவதான மதிப்பீட்டில் வாகனம் வரையறை செய்யப்பட்ட வேகத்தினை விட அதிகமாகவே செலுத்தப்பட்டது என்பது.

மேற்குறிப்பிடப்பட்ட நியாயங்களை சரியான முறையில் நிரூபிக்கவில்லை ஆனால் குற்றச் சாட்டினையும் நிரூபிக்க முடியாமல் போய்விடும்.


மோட்மேஜ் தேவையா?
Northwood Mortgage Ltd
5 வருட மோட்கேஜ் @ 5.99%
10 வருட மோட்கேஜ் @ 6.60%
"Specialist in Residential, Commercial, Industrial & Difficult to Place Mortgage
Difficult Situation:
* Self Employed * சொந்தமாக தொழில் செய்பவர்களா?
* Non Income Verifiers * Credit பிரச்சினைகளா?
* Some Credit Issues * 5% முதலீடா?
* 5% Down Payment * வருமானம் உறுதிப்படுத்துவதில் சிக்கலா?
Pl.Call Bus: (416) 969-8130 Cell: (416) 919-7919
Fax: (905) 508-7285




பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(416) 439-3709
Pager: 375-7330



வீதி ஒழுங்குச் சட்டப்படி இத்தகைய சட்ட ரீதியாக வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட அதிகமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் தண்டனைப் பணத் தொகை விபரமும், இழக்கப்படும் புள்ளி மதிப்பீடுகளும் பின்வருமாறு.

| Km/h over the limit | Fine per km/h over the limit |
|---|---|
| 1 - 19 | **$3.00** |
| 20 - 34 | **$4.50** |
| 35 - 49 | **$7.00** |
| 50 + | **$9.75** |

அதாவது 60 **Km/h** என வரையறை செய்யப்பட்ட ஒரு வீதியில் 90 **Km/h** இல் ஒருவர் வாகனத்தினை செலுத்தினால் தண்டனைப் பணம் பின்வருமாறு அமையும்.

இங்கு வரையறை செய்யப்பட்ட வேகத்தினை விட 30 **Km/h** இனால் அதிகமாக வாகனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே முதல் 19 **Km/h = 19 x $ 3.00** = $ 50.00

மேலதிக 11 **Km/h** இக்கும் = 11 x $4.50 = **$49.50**

மொத்தத் தண்டனைப் பணம் = 50 + 49.50 = **$106.50**

## புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

| Km/h over the limit | Demerit points |
|---|---|
| 1 - 15 | 0 |
| 16 - 29 | 3 |
| 30 - 49 | 4 |
| 50 + | 6 |

அதாவது வரையறுக்கபட்ட வேகத்தினை விட அதிகமாக செலுத்தும் முதல் 15 **km/h** தவிர அதிகரிக்கப்பட்ட வேகத்திற்கு ஏற்ப புள்ளி மதிப்பீடுகளும் இழக்கப்படுகின்றது.

தொடரும்....


மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
**(Professional Licensed Instructor In Car & Class Room)**

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 09

-Dr. N. S. Moorthy Ph.D



பண்டைத் தமிழர் வாழ்க்கை முறையுடனும், மதச் சடங்குகளுடனும் காணப்படும் சில முக்கிய விடயங்களை ஆழ்ந்து நோக்குகையில் அக்குபங்சர் சிகிச்சை முறை எமது வாழ்க்கையுடன் இணைந்து விளங்குவதை கடந்த சில இதழ்களில் பார்த்தோம். அதைப் பற்றிய மேலதிக தகவல்களை பார்ப்போம்.

## தீ மித்தல்:

இன்றும் கூட ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சில சைவக் கோவில்களில் திருவிழாக் காலங்களில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நெருப்பை உண்டாக்குவார்கள். அந்நெருப்பு தணல்களை நிலத்தில் பரப்பி தகதகவென மின்னும் அத்தணல்கள் மீது ...நி சிரத்தையுடன் பலர் தமது வேண்டுதல்களை நிறைவேற்ற அநாயசமாக நடந்து அக் குறிப்பிட்ட தூரத்தைக் கடப்பதை நாம் கண்ணாரக் காணக் கூடியதாக உள்ளது. இச் செயல்பாட்டின் அடிப்படையை நாம் அவதானிக்குமிடத்து உடலைத் தாங்கும் பாதங்களில் வெப்பம் படுவதே முக்கியமாகக் காணப்படுகிறது. நான் ஏற்கனவே முந்திய கட்டுரைகளில் குறிப்பிட்டபடி கால்களின் அடிப் பாதங்களிலிருந்து பல சக்திப் பாதைகள் புறப்படுவதாகக் கூறப்படுகிறது. அக்குபங்சர் சிகிச்சையின் ஒரு அங்கமாகக் கணிக்கப்படும் பாதச்சிகிச்சையின்படி (REEFLXOLOGY) பாதங்களை உரியமுறையில் அழுத்தி சிகிச்சையளிப்பதன் மூலம் உடலின் உறுப்புக்களில் காணப்படும் பலவித நோய் நிலைகளை குணமாக்கலாம். அது மட்டுமல்லாது மனச் சோர்வு நித்திரையின்மை போன்ற நிலைகளை நீக்கி உற்சாகத்தையும் நல்லுறக்கத்தையும் தரவல்லதாக இச் சிகிச்சை முறை அமைகிறது. எனது சொந்த அனுபவத்தில் அதிக காய்ச்சல் காரணமாக மூளை சூடேறி குழந்தைகளுக்கு ஏற்படும் வலிப்பு நிலைக்கு (FEBRILE CONVULSION) கால் பாதத்தின் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் ஊசியைச் செலத்துவதன் மூலம் உடனடியாக பலன் கிடைத்த பல சந்தர்ப்பங்களை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. மாதவிடாய் வலிகள், கர்ப்பப்பை கோளாறுகள் போன்ற பல நிலைகள் பாதத்தில் மட்டும் சிகிச்சையளிப்பதால் நிவர்த்தி செய்யப்படக் கூடியன.

மேலும் பாதங்களை வருடி அழுத்துவதன் மூலம் உடலின் நோய்நிலைகளை நன்கு உணரக் கூடியதாகவுள்ளது. பல நவீன முறைகளால் கண்டு பிடிக்கமுடியாமல் போன நோய் நிலைகள் கூட இம் முறையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பல சம்பவங்கள் இப்போது மேலைத்தேச நாடுகளில் நடைபெற்றுள்ளன் உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் பிரதிபலிக்கும் ஒவ்வொரு பிரிவுகள் (ZONE) பாதத்தில் காணப்படுகின்றது. காலின் பெருவிரல் தலைப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இது போன்ற சிறுநீரகம், ஈரல், கருப்பை, சுவாசப்பை, இருதயம், முள்ளந்தண்டு இப்படியாக பல்வேறுபட்ட முக்கிய உறுப்புக்களுக்குமான பகுதிகள் பாதத்தில் காணப்படுகின்றன.

நெருப்பை பொறுத்த வரையிலும் கூட அது அக்குபங்சர் சிகிச்சையின் ஒரு முக்கிய பகுதியான MOXI BUSTION சிகிச்சைக்கு (வெப்பமேற்றுதல்) அடிப்படையாக உள்ளது. மொக்ஸா என அழைக்கப்படும் ஒரு தாவரத்தின் காய்ந்த இழையங்களை பஞ்சு போல் திரட்டப்படும். அதனை உடலினுள் செலுத்தப்பட்ட அக்குபங்சர் ஊசியின் கைபிடி முனையில் வைத்து நெருப்பைக் கொழுத்தி அதன் மூலம் வெப்பத்தை ஊசி மூலம் உடலுள் கடத்துவர். அவ் வெப்பம் குறிப்பிட்ட சக்திப் புள்ளியைத் தூண்டி சிகிச்சையளிக்கும் முறை இதுவாகும். அதுமட்டுமல்லாது நேரடியாகவே உடலின் குறிப்பிட்ட சில பகுதிகளில் தோலுக்கு மிக அருகில் இம் மொக்ஸாப் பஞ்சில் தீயைப் பற்றவைத்து சில குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேலாகப் பிடிப்பதன் மூலம் பல நோய்களை சீன மருத்துவர்கள் குணமாக்கி வருகின்றார்கள். நம் நாட்டில் கூட காக்காய் வலிப்பு, மன நோய் போன்ற நிலைகளைக் குணமாக்க பண்டைய தமிழ் மருத்துவ முறையின் படி நெருப்பினால் உடலில் சில குறிப்பிட்ட இடங்களில் சூடு போடும் சிகிச்சை முறையாக இருந்து வந்துள்ளது.


ஆகவே நெருப்பு அதிலிருந்து புறப்படும் வெப்பம் ஆகியன பல்வேறுபட்ட நோய் நிலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது தெளிவாகின்றது. பாதங்கள் உடலின் நிலையை வெளிப்படுத்தும் கண்ணாடி போலவும் அதேவேளை பாதங்களினூடே ஊசியையோ வெப்பத்தையோ செலுத்தி அதன் மூலம் பல நோய்களை குணமாக்கலாம். மேலும் உடலை சமநிலையில் வைத்திருக்கவும் முடியுமென நம்முன்னோர்கள் நம்பியிருக்கலாம். இதன் வெளிப்படாகவே தீமிதிக்கும் நடைமுறை செயல்படுத்தப்பட்டு பின்னர் மதநம்பிக்கைகளுடன் கலந்து ஒரு மதச்சடங்காக பரிணமித்திருக்கலாம் என எண்ண இடமுண்டு.

## தீச்சட்டி எடுத்தல்:

தீமிதித்தலுக்கு அடுத்த படியாக வருவது கோவில்களில் தீச்சட்டி எடுப்பதாகும். ஆண்கள் தீமிதிப்பதையும் பெண்கள் தீச்சட்டி எடுப்பதையும் சைவ ஆலயத் திருவிழாக்களில் காணலாம். மண் சட்டியினுள் ஏற்றப்படும் தீயானது படிப்படியாக ஓர் இளகிய வெப்பத்தை சிரசினூடே உடலுள் பரவச் செய்கிறது. "எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்" என்பது பழமொழி உடலின் செயல் பாடுகளை சமப்படுத்தும் முக்கிய உறுப்பான மூளை மண்டையோட்டுக்குள் இருப்பது மட்டுமல்ல தலையின் முக்கியத்துவம் சீன வைத்திய சாத்திரத்தின்படி எமது உடல் உள சமநிலையைப் பேணச்செய்யும் முக்கிய சக்திப்பாதைகள் தலையின் உச்சிப் பகுதியில் காணப்படுகின்றது. மண்டையோட்டின் மேல் புறமாக மிகச்சிறிய மெல்லிய ஊசிகளை மிகக் குறைந்த ஆழத்திற்கு செலுத்திச் செய்யப்படும் சிகிச்சை CRANIAL ACUPUNCTURE எனப்படும் ஒற்றைத் தலைவலி (MIGRAINE), பாரிசவாதம்( PARALYSIS), தாக்கமின்மை (INSOMNIA), காக்கை வலிப்பு (EPILEPSY) போன்ற நோய் நிலைகளுக்கு இச் சிகிச்சை முறை நல்ல பலன்களை அளிக்கக் கூடியது. இவ் ஊசிகளின் ஊடாக மிக மெல்லிய வெப்பத்தைச் செலுத்தும் MOXIBUSITON சிகிச்சை முறையும் இதனுள் அடங்கும். இதன் பெருமைகளை முன்னரே அறிந்து தானோ என்னவோ நம் பண்டைய தமிழர்கள் தீச்சட்டி எடுக்கும் முறையை ஓர் சிகிச்சையாக ஆரம்பித்து பின்னர் வேண்டுதல் வழிப்பாட்டு முறையாகப் பழக்கப்படுத்தியிருக்கலாம் என்று எண்ண இடம் உண்டல்லவா.


RICHMOND HILL HONDA

HONDA வாகனங்களின் தமிழ் பிரதிநிதி
சோதீஸ் மூலம்
உங்களின் புதிய பழைய வாகனங்களை சிறந்த சேவையுடன் பெற்று உங்களின் சேமிப்பை உறுதிப்படுத்துங்கள்.



SPECIAL SALES PRICE

| | |
|---|---|
| Leather Seating | $1995.00 |
| Rear Spoiler | $ 695.00 |
| Woodgrain Package | $ 499.00 |
| Total Value | ~~$3189.00~~ |

Sothees இன் Price For You?
Come and Meet Me

"WE HAVE OVER 75 USED CARS"

RICHMOND HILL HONDA
"our service makes the difference"
8800 YONGE STREET., Richmond Hill
Ontario, L4C 6Z5
www.richmondhillhonda.com

TEL: 905-731-8899
T.O: 416-324-2874
FAX: 905-731-9066
Cell: 416-704-1179



யோகா சோதிடம்



கிரகப் பொருத்தம் பார்த்தல்
சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக்குறிப்பு கணித்தல்
பலன் பார்த்தல்
☎: (416) 299-8361


## அலகு குத்துதல்:



இன்று நம் கோவில்களில் இரு கன்னங்களின் ஊடாகவும் வெள்ளிக் கம்பியைச் செலுத்தி வேண்டுதல் நிறைவேற்றும் அலகு குத்தும் வழக்க முறை நடைமுறையில் இருந்து வருகிறது. மாம்பழக் கன்னமென்றும், மாதுளம் பழமென்றும் வர்ணிக்கப்படும் அழகிய கன்னங்களில் கம்பியால் குத்தும் வழக்க முறை ஏன் வந்தது என நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து இதுவும் ஓர் மருத்துவ சிகிச்சை முறையாகவே ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

ஏனெனில் பல்வலி (Toothache), பீனிசம் (sinusitis), முக வாதம் (Facial Paralysis), முக நரம்பு வலி (Trigeminal Neuralgia) போன்ற நோய்களுக்கு ஊசியைச் செலத்தி அக்குபங்சர் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந் நோயைகளைக் கட்டுப்படுத்தும் முக்கிய சக்திப் புள்ளிகள் (Meridian Points) கன்னப் பிரரேசத்திலேயே உள்ளன.

மேற்குறிப்பிட்ட புள்ளிகளில் அக்குபங்சர் முறை மூலம் ஊசியைச் செலுத்தி நல்ல பலனை அடையலாம். அது மட்டுமல்லாது நோய் வராது தடுக்கவும் (Prevention) செய்யலாம். இக் காரணங்களை ஏற்கனவே அறிந்து தானோ நம் முன்னோர்கள் அலகு குத்துதல் போன்ற வணக்க முறைகளை நடைமுறைப் படுத்தினார்கள் என்று எண்ண இடம் உண்டு.

கன்னங்கள் அதிக உணர்ச்சியுள்ள பிரதேசங்கள் ஆகும். இவ் உணர்ச்சி நிலைகளை பேணுவதற்கும் இச் செயல்களும் உதவி செய்யலாம். இதைத் தான் பாரதியாரும் கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் தான் கள் வெறி கொள்ளும் அடி என்று பாடியுள்ளார்.

தொடரும்....

# விளையாட்டுத் தகவல்கள் (73)

-எஸ். கணேஷ்



## இலங்கை கிரிகெட் அணியின் புதிய சாதனை கிரிகெட்

உலகில் கிரிகெட் ஆட்டத்தையே அறிமுகப்படுத்தியவர்கள் இங்கிலாந்து நாட்டவர் ஆவர். கிரிகெட் ஆட்டம் வெள்ளைகாரருடைய ஜென்டில்மேன் ஆட்டம் எனப் புகழ் பெற்றிருந்த வேளையில் இது வெள்ளைக்காரருடைய ஆட்டம் மட்டுமல்ல உலகம் முழுவதுமே சொந்தம் என்பதைக் கறுப்பு இனத்தவரான மேற்கு இந்திய தீவுகள் பல வெற்றிகளை பெற்று நிருபித்தது. இதைவிட பாகிஸ்தான், இந்தியா, ஶ்ரீலங்கா தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றும் நிருபித்தது. இப்போது தலைசிறந்த அணியாகக் கருதப்படும் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியிடம் நன்கு வாங்கிக் கட்டிக் கொண்டதும், ஶ்ரீலங்கா அணி ஒருநாள் ஆட்டங்களையும் 3 - 0 என்ற நிலையில் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்து உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கிரிகெட் ஆட்டத்தின் தாய் நாடாகக் கருதப்படும் இங்கிலாந்து, இது வரை 325 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களை ஆடி முடித்துள்ளது. இதில் எந்த ஒரு ஆட்டத்திலும் இங்கிலாந்து அணி இந்த 325 ஆட்டத்திலும் படு தோல்வியான 10 விக்கெட் தோல்வியைச் சந்திக்கவில்லை. பல வருடக்கணக்கில் கிரிக்கெட் ஆடும் இங்கிலாந்து அணி இதுவே முதற்த் தடவையாக ஶ்ரீலங்கா அணியிடம் ஒரு நாள் ஆட்டத்தில் 10 விக்கெட்டுகளால் தோல்வி அடைந்துள்ளது. டெஸ்ட் ஆட்டத்தில் அது கூடிய வெற்றி என கருதப்படுவது இனிங்சால் வெல்லுவதாகும், ஒரு நாள் ஆட்டத்தில் அதி கூடிய வெற்றி 10 விக்கெட்டுகளால் வெல்லுவதாகும்.

***கிரிகெட் சரித்திரத்தில் இது வரை ஒரு நாள் ஆட்டங்களில் 10 விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டி சாதனை படைத்துள்ள நாடுகளை இங்கு பார்ப்போம்***

| | | |
|---|---|---|
| 1975 - 10 விக்கெட்டுகள் - இந்தியா (123 - 0) BEAT | EAST AFRICA | (120) |
| 1981 - 10 விக்கெட்டுகள் - நியூசிலாந்து (113 - 0) BEAT | INDIA | (112 - 9) |
| 1983 - 10 விக்கெட்டுகள் - WEST INDIES (172 - 0) BEAT | சிம்பாவே | (171) |
| 1984 - 10 விக்கெட்டுகள் - இந்தியா (97 - 0) BEAT | ஶ்ரீலங்கா | (96) |
| 1985 - 10 விக்கெட்டுகள் - WEST INDIES (117 - 0) BEAT | நியூசிலாந்து | (116) |
| 1986 - 10 விக்கெட்டுகள் - WEST INDIES (221 -0) BEAT | பாகிஸ்தான் | (220- 2) |
| 1987 - 10 விக்கெட்டுகள் - WEST INDIES (200 - 0) BEAT | இந்தியா | (199 - 7) |
| 1992 -10 விக்கெட்டுகள் - WEST INDIES (154 -0) BEAT | SOUTH AFRICA | (152) |
| 1998 - 10 விக்கெட்டுகள் - இந்தியா (197 - 0) BEAT | சிம்பாவே | (196 - 9) |
| 2000 -10 விக்கெட்டுகள் - இங்கிலாந்து (171- 0) BEAT | WEST INDIES | (169 - 8) |
| 2000 -10 விக்கெட்டுகள் - SOUTH AFRICA (168 - 0) BEAT | இந்தியா | (164) |
| 2001 -10 விக்கெட்டுகள் - அவுஸ்திரேலியா (124 - 0) BEAT | WEST INDIES | (123) |
| 2001 -10 விக்கெட்டுகள் - ஶ்ரீலங்கா (166 - 0) BEAT | இங்கிலாந்து | (165 - 9) |

ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் இப்போது ஶ்ரீலங்கா இரண்டு புதிய சாதனைகளை இது வரை ஏற்படுத்தியுள்ளது. முதலாவது சாதனை ஶ்ரீலங்கா அணி இந்திய அணியை சென்ற வருடம் சாஜா கிண்ண ஆட்டத்தில் 245 ஓட்டங்களை எடுத்து அதி கூடிய ஓட்டங்களால் (HIGHEST MARGIN OF VICTORY BY RUNS) என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாவதாக இப்போது 10 விக்கெட்டுகளால் வென்று சாதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில வாரங்களாக இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் ஆட்டங்களிலும் 3 ஒரு நாள் ஆட்டிங்களிலும் கலந்து கொள்ள ஶ்ரீலங்கா சென்றுள்ளது. இதில் டெஸ்ட் ஆட்டங்களில் 2 - 1 என்ற நிலையில் இத் தொடரை இங்கிலாந்து அணி ஶ்ரீலங்கா அணியை வென்றமை சென்ற இதழில் பார்த்தோம். அடுத்து நடந்த 3 ஒரு நாள் ஆட்டங்களில் ஶ்ரீலங்கா அணி டெஸ்ட் ஆட்டங்களில் விட்ட பிழையை ஈடு செய்யும் முகமாக இங்கிலாந்து அணியை 3 - 0 என்ற ரீதியில் வெற்றி பெற்றுள்ளது.

இதன் விபரம் கீழே பார்ப்போம். 1) 1st ODI ஆட்டம் மார்ச் 23, 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களை எடுத்தது. இதில் THORP 62, STEWART 21 ஓட்டங்களை எடுத்தனர். இதில் முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும், ZOYSA 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். அடுத்து ஆடிய ஶ்ரீலங்கா அணி 40.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதில் ஜெயசூரியா 39, அத்தபத்து 40, ஆனோல்ட் 39 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் MAN OF THE MATCH விருது முரளிதரனுக்கு வழங்கப்பட்டது.




2) 2nd ODI ஆட்டம் மார்ச் 25, 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ஜெயவர்த்தனா 101, அத்தபத்து 57, தர்மசேனா 18 ஓட்டங்களைப் பெற்றனர். அடுத்துக் களம் இறங்கிய இங்கிலாந்து அணி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றுள்ளது. பந்து வீச்சில் முரளிதரன் 9 ஓவர்களில் பந்து வீசி 2 மேஷன் ஓவர் போட்டு 11 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் MAN OF THE MATCH விருது ஜெயவர்த்தனாவிற்கு வழங்கப்பட்டது. ஶ்ரீலங்கா அணி 66 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

3) 3rd ODI ஆட்டம் மார்ச் 27, 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. HICK 46, EALHAM 28 ஓட்டங்களைப் பெற்றுகொண்டனர். இதில் வாஸ் 3, தர்மசேனா 2, சோசா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள். அடுத்து ஆடிய ஶ்ரீலங்கா அணி அதிரடி ஆட்டம் ஆடி ஒரு விக்கெட்டையும் இழக்காமல் 33 ஓவர்களில் 166 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டி ஒரு சாதனையை படைத்துள்ளது. இதில் கலுவுத்திரான 102, அத்தபத்து 53 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்ட நாயகனாக கலுவுத்திரனா தெரிவு செய்யப்பட்டார். இப்போது கிரிகெட் ஒரு நாள் ஆட்டங்களில் இலங்கை அணி மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. ஆனால் டெஸ்ட் ஆட்டிங்களில் 2001 ஆண்டில் இது வரை ஶ்ரீலங்கா அணிக்கு சோதனைக் களமாகவே உள்ளது.



சேர். டொனால்ட் பிரட்மேன் காலமானார்:

உலகத்தில் கிரிகெட் உலகில் மிகவும் புகழ் பெற்ற அவுஸ்திரேலிய நாட்டவர் ஆன SIR DONALD BRADMAN தனது 92 வது வயதில் காலமானார். கிரிகெட் சரித்திரத்தில் துடுப்பாட்டத்தில் 99 - 94 விகிதத்தில் (Average) தன்னகத்தே கொண்ட ஓரே ஒரு வீரர் ஆவர். 1930 ஆம் ஆண்டு 334 ஓட்டங்களை இங்கிலாந்துக்கு எதிராக பெற்றார். இரண்டு தடவைகள் ஒரு ஆட்டத்தில் 300 ஓட்டங்களையும், 12 தடவைகள் 200 ஓட்டங்களையும், 29 தடவைகள் 100 ஓட்டங்களையும் பெற்றவர். உலகத்திலேயே ஓரே ஒரு கிரிக்கெட் வீரர் சேர் டொனால்ல் பிரட்மேட் ஆவர்.

புதிய காட்சியறையில்



SABONA
& GIFT
(416) 264-8787 (416) 269-8151
2602 B Eglinton Ave. East, Scarborough
www.tamilclub.com/sabona sabona@home.com

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்



"கைகொடுக்கும் கை" ரஜனி ரேவதி நடித்த இப்படத்தை இயக்கியவர் மகேந்திரன் ஆகும். சிறந்த கதையமைப்பில் உருவான இப்படத்தில் கன்னட நடிகர் ரங்கநாத் வில்லனாகவும் ரேவதி குருட்டுப்பெண் வேடத்திலும் நடித்திருந்தனர். சின்னிஜெயந்த் அறிமுகமானது இப்படத்தில்தான். பெருவெற்றி பெற்ற கன்னடப்படத்தின் remake தான் இப்படம். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் தமிழில் ரங்கநாத் செய்த வில்லன் பாத்திரத்தில் ரஜனியும், ரங்கநாத் கதாநாயகனாகவும் நடித்திருந்தனர். இதைத்தவிர ரஜனியின் "தம்பிக்கு எந்த ஊரு" படம் வெளியானதும் இவ்வாண்டில்தான். மிகச்சிறந்த நகைச்சுவைப்படம். தன்னால் நகைச்சுவை நடிப்பும் நடிக்க முடியும் என ரஜனி நிருபித்துள்ளார். மேலும் AVM இன் "நல்லவனுக்கு நல்லவன்", மற்றும் "நான்மகான் அல்ல", "அன்புள்ள ரஜனிகாந்த்" ஆகிய வெற்றப்படங்களையும் ரஜனி தந்திருந்தார். "நல்லவனுக்கு நல்லவன்" படத்தின் கதை வசனத்தை விசு எழுதியிருந்தார். இதில் முதலும் கடைசியுமாக கார்த்திக் ரஜனியுடன் நடித்திருந்தார்.

"சிறை" தமிழ் நாடு அரசின் விருதினைப் பெற்ற இப்படத்தை சக்தி டைரக் பண்ணயிருந்தார். ராஜேஷ், லக்சுமி, பிரசன்னா ஆகியோர் திறம்பட நடித்துள்ளனர். சிறந்த கதை நடிப்புக்காக மட்டும் இப்படம் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றது.

"அலைகள் ஓய்வதில்லை" படம் மூலம் அறிமுகமான தியாகராஜன் இவ்வாண்டில் இரு படங்களில் கதாநாயகனாக நடித்திருந்தார். கொம்பேறிமூக்கன்", "நெருப்புக்குள் ஈரம்". இதில் 'நெருப்புக்குள் ஈரம்' படத்தை MGR இன் சத்தியா மூவிஸ் தயாரித்துள்ளார்கள். இது ஒரு 100 நாள் வெற்றிப் படம் ஆகும்.

# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (Ticket) வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 6**

1. 'பிரியாத வரம் வேண்டும்' படத்தின்' இசையமைப்பாளர் யார்?
2. 'விதி' படத்ல் சுஜாதாவின் பாத்திரம் என்ன?
3. 'நினைக்காத நாவில்லை' படத்தின் தயாரிப்பாளர் யார்?

**** சினிமாப் போட்டி #5இன் விடைகள்***

1. சிவாஜி, சுஜாதா, சிவாஜி, ஶ்ரீதேவி
2. தங்கைக்கோர் கீதம்
3. கார்த்திக் ராஜா

***போட்டி #4இல் வெற்றி பெற்றவர்கள்**

1) க. அன்னலிங்கம், Scarborough



விடைகளை April 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.







# செயல்

*மின்மினிப் பூச்சி பறக்கும் போதுதான் சுடர்விடுகிறது. மனிதனும் செயல்புரியும் போதுதான் உயர்வடைகிறான்.

* எதையும் உடனே செய்து முடித்து விடுங்கள். ஒதுக்கி வைத்தால் சுமை கூடி, ஒன்றையுமே செய்ய முடியாமல் போய்விடும்.

*உங்களுக்குச் சரியென்று பட்டதைச் செய்யுங்கள்; மற்றவர்களுக்குச் சரியென்று பட்டதையல்ல.

*நல்ல யோசனை, நல்ல திட்டங்களுகாகக் காத்துக் கிடக்க வேண்டாம். கைவசம் உள்ளதைச் சிறப்பாகச் செய்து நிச்சயமாக.

* நீங்கள் இருப்பதீ சரியான பாதையானாலும் சரி, அதில் நடந்து கொண்டிருக்க வேண்டும். அமர்ந்து

*ஒன்றே செய்க,
ஒன்றும் நன்றே செய்க,
நன்றும் இன்றே செய்க,
இன்றும் இப்போதே செய்க,

*ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கான முதற்படி, ஆரம்பிப்பதுதான்.

*எதையும் அரைகுறையாக விட வேண்டாம். முழுமையாகச் செய்து முடியுங்கள். அரைக் கிணறு தாண்டுவது ஆபத்தல்லவா?

*நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க, வாழ ஓர் அம்சம் மட்டுமே தேவை. எதிலும் நேர்மையாய் இருங்கள். நேர்மையான செயல்களைச் செய்வதில் மட்டுமே அக்கறை கொள்ளுங்கள்.

*சுறுசுறுப்புடனும், ஆர்வத்துடனும் செயல்படுபவனுக்குத்தான் இந்த உலகம் சொந்தம்.

*பெருமையுள்ள செயல்கள் அனைத்தும் அநேகமாக இளைஞர்களாலேயே செய்யப் பெற்றிருக்கின்றன.

*செயலில் உறுதியாயிருத்தலே வெற்றியின் ரகசியம்.

*முழு உலகமும் சேர்ந்து கையில் கத்தி கொண்டு எதிர்த்து நின்றாலும், நீங்கள் சரியென்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின்வாங்காது செய்யவல்ல சக்தி உங்களுக்கு இருக்கவேண்டும்.

*உங்களால் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றித் தினமும் பேசிக் கொண்டிருக்காதீர்கள். அவைகளைச் செய்து காட்டுங்கள்.

* நம்முடைய செயல்களே நாம் எப்படிப்பட்டவர் என்பதைப் பிறருக்கு உணர்த்தும்.

*பெருமை பட்டங்களில் பெறுவது அல்ல; நாம் செய்யும் செயல்களில்தான்.

*உள்ளத்தில் அன்பு இருந்தால் மட்டும் போதாது; அது செயலில் வெளிப்பட வேண்டும்.

*முடிந்த வழிகளில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த வகைகளில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த இடங்களில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த மனிதருக்கெல்லாம் நன்மை செய்.

*உன்னால் முடிந்தவரையில் உன் பணியினை இன்று நன்றாகச் செய்.நாளை அதனினும் நன்றாகச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும்.

*நாம் பெறும் கருத்துக்களின் அறிவை செயலில் பயன்படுத்தாவிட்டால் நூல்கள் வெறும் மை ஊறிய தாள்கள்தான்.

*விருப்பமில்லாத கடினமான காரியங்களை ஒத்திப்போட வேண்டாம். உடனே செய்து முடித்து விடுங்கள். அப்புறம் நிம்மதியாக இருக்கலாம்.

*நாம் எவ்வளவு செய்யப் போகிறோம் என்பது முக்கியம் அல்ல; எவ்வாறு செய்யப்போகிறோம் என்பதே முக்கியம். அதிகமாகச் செய்வதைக் காட்டிலும் செய்வதைத் திருந்தச் செய்வதே சிறப்பு.


**கிராமத்து விருந்து**



RESTAURANT, CATERING, TAKE OUT | L.L.B.O.

603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

***TAKEOUT OR DINE IN***
***MARCH BREAK SPECIAL***

தலை வாழையிலை விருந்து:
ஆடு, கோழி, மீன், மரக்கறிப் பார்சல்
அல்லது அமர்ந்து சாப்பிட (**Dine in**)
**$4.99** + Tax மட்டும்

அப்பம் சோடி - **.99¢**

குளல் பிட்டு:
ஆடு/கோழிக் கறி, சம்பல், பருப்பு
**$4.99** + Tax மட்டும்

மசால தோசை அல்லது யாழ் தோசை ------ **$3.99**
சிக்கன் நூடில்ஸ் (**Spicy**) ---------------- **$4.99**
பெரிய கால் நண்டுக் கறி விருந்து ------ **$9.99** + Tax
(மட்டக்களப்பில் இருந்து தருவிக்கப்பட்டது.)
குடும்பத்துடன் வரவும்

**TAKE-OUT ONLY NO TAX**
**விபரம் அறிய - 416 266 - 4240**

**இந்தியா செல்கிறீர்களா? இந்தியாவில் திருமண ஒழுங்குகள் மேற்கொள்ள அழைக்கவும்**
ஜோசப் **(416) 266-4240**



**VIMAC HOME RENOVATIONS**

**SPECIALIZING IN INSTALLATION OF**
* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS
& GENERAL HOME RENOVATION

**FREE ESTIMATE**

CONTACT : **VIC** AT BUSINESS: **416 266 6566 / 416 266 7227**
**REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES**



**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் ரவி நடராஜா**
இப்போது இரண்டு இடங்களில் சேவையாற்றுகின்றார்



» வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
» உரிய இழப்பீடுகள், » மற்றைய இழப்பீடுகள்
» விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
» மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

*Accident & Traffic Ticket* *(12 Years Insurance Claims Experience)*

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.


**பொன்மொழிகள்**

1) உலகம் உள்ளவரை இன்ப துன்பங்கள் இருந்து வரும்.
2) அவாவே துன்பத்திற்குக் காரணம். அவாவினை ஒழித்தவர்க்கு உலகம் இன்ப மயமாக விளங்கும். அவரே வீட்டின்பத்தையும் பெறுவதற்குரியவர்.
3) மனிதன், தனக்கு அடிமைப்படுதல் கூடாது; தன்னுடன் ஒன்றியிருக்கும் பரமாத்மாவுடன் கலக்கப்பாடுதல் வேண்டும்.
4) மனிதனிடத்தில் 'நான், எனது' என்ற அகந்தை ஒழிதல் வேண்டும்.




**J DAYCARE**

> 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
> ECE தகுதி பெற்ற நடத்துனர்
> TAX RECEIPT வழங்கப்படும்
> காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
> மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00


தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் **(416) 502-3033**
*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro, Ont. M1W 2J9*

# விண்வெளி 58

## அந்நியர்கள்-பூமியின் சொந்தக்காரர்கள்

தருபவர்:- கனி



செவ்விந்தியர்! கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்த போது கூடவே இந்தச் செவ்விந்தியரும் உலகினரால் இனம் கண்டு கொள்ளப்பட்டனர். உலகின் மற்றய இனங்கள் போலல்லாது செந்நிற மேனியரான இவர்களில் பல வெவ்வேறு குழுக்கள் இருப்பினும் எல்லோருமே செவ்விந்தியர்கள் என அழைக்கப்படுகிறார்கள். உலக நாகரீகத்தில் வெகுவேகமாக முன்னேறி வரும் இவ் வேளையில் ஒரு சில செவ்விந்தியர்களைத் தவிர ஏனையோர் விடாப் பிடியாக தமது இயற்கையுடன் ஒன்றிய வாழ்வில் தொடர்ந்தும் ஒன்றித்து வாழ்கின்றார்கள். தம் முன்னவர்களின் அறிவுரைகளை விலத்தி வரத் தமக்கு இஷ்டம் இல்லை என்கிறார்கள். ஏன்? விடையும் தருகிறார்கள். மனிதனின் கண்டுபிடிப்புகளே ஒரு நாளில் அவனை அழித்துவிடும் என்கிறார்கள். எப்படி அழிக்கும்? ஏன் அழிக்கும்? விடை [illegible]த் தெரியாது கைவிரிக்கும் அவர்கள் தமது கொள்கையில் நின்றும் வெளிவராமல் விடாப்பிடியாக நிற்கிறார்கள். இந்த இயல்பு நம்மவர்களை வியப்புக்குள்ளாக்கியதுடன் சிந்திக்கவும் தூண்டியது. செவ்விந்தியர்களின் நடவடிக்கைகளையும் அவர்கள் வாழும் விதத்தையும், அவர்களது வதிவிடச் சுற்றுப் புறங்களையும் அவதானித்து ஆராய்ந்த ஆய்வாளர்களுக்555கு சில வியப்பான விடயங்கள் தெரிய வந்தன.

சில செவ்விந்தியர்கள் தாம் வாழும் இடங்களில் சில படங்களை கற்பாறைகளில் வரைந்து வைத்திருக்கிறார்கள். இன்றும் வரைகிறார்கள். இன்னது தான் வரைகிறோம் என்று தெரியாமல் ஆனால் மிக நேர்த்தியாக வரையப்பட்ட, வரையப்படும் இப் படங்களைப் பார்த்ததும் எங்கள் ஆய்வாளர்கட்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சில படங்கள் விண்கலங்களை ஞாபகப்படுத்துவது போல் இருந்தது. வேறு சில படங்கள் விண்வெளி உடுப்புகளுடன் விண்வெளிக்கு செல்லும் அல்லது நடமாடும் ஒரு விண்வெளி வீரரைப் போல் இருந்தது. மேலும் பல சைன்(Sin), தான் (Tan) வளையிகளை எந்தவொரு பிசிறும் இல்லாது கற்பாறைகளில் வெள்ளை, சிகப்பு நிறங்களில் வரைந்திருந்தார்கள். பொதுவாக மிருகங்கள், வேட்டையாடுதல் போன்ற சாதாரண பல படங்களுள் மேலே கூறப்பட்ட சில படங்களையும் கீறி வைத்துள்ளார்கள். அவர்களது வாழ்க்கையுடன் எள்ளளவேனும் ஒவ்வாத இப் படங்களை ஏன் வரைந்து வதைத்துள்ளார்கள்? அதன் தேவைதான் என்ன? ஒரு வேளை இப் படங்கள் எல்லாம் ஒரு தற்செயலான ஒன்றிப்பா? செவ்விந்தியர்களிடம் இதற்கான விளக்கம் ஏதும் இல்லை. ஆனால் காலம் காலமாக தாம் இந்தப் படங்களை வரைந்து வருவதாகக் கூறுகின்றார்கள். இதன் அடிப்படையில் என்ன முடிவுக்கு வரமுடிகிறது? ஒரு காலத்தில் நாகரீகத்தில் விஞ்ஞான அறிவில் இந்த இனம் மிக உயர்வாக இருந்திருக்க வேண்டும். ஏதோ ஒரு காரணத்தால் ஒரு வேளை விஞ்ஞான மேம்பாட்டின் விளைவால் வரும் அழிவுக்குட்பட்ட காரணத்தால் சகலதையும் விட்டு இயற்கையுடன் இணைந்து வாழுபவர்களாக இருக்க வேண்டும். செவ்விந்தியர் சமாச்சாரம் இத்துடன் முடிகின்றதா எனப் பார்த்தால் இல்லை இன்னமும் தொடர்கின்றது.

ஆடல், பாடல், கூத்து, கும்மாளம் எல்லாம் இந்தச் செவ்விந்தியரின் வாழ்க்கையுடன் ஒன்றித்தது. இவ்விதம் ஆடல், பாடல் நடைபெறுகையில் சிலர் தம்மை விசேசமாக அலங்கரித்துக் கொள்வார்கள். இதன் சிறப்பு அம்சம் என்ன என்றால் சிலரது அலங்கார அமைப்பு விண்வெளி உடுப்புக்கள் போன்று இருக்கும். உடல் முழுவதும் காற்றுத் தடுப்பு ஆடைமூடப்பட்டது போலவும் தலைக்கவசம் அணிந்து (விசேட கழிமண்ணால் இந்தத் தலைக் கவசம் செய்கிறார்கள்) இருப்பது போலவும் இந்த ஆடை அலங்காரம் இருக்கும். இது ஏன் எனக் கேட்கும் போது தான் சில வில்லங்கமான பதில்களைத் தருகிறார்கள். பலருக்கு இந்த உடை என்ன? இதன் உபயோகம் என்ன என்று தெரியவில்லை. பரம்பரை பரம்பரையாக இதைச் செய்து கொண்டு வருகிறோம் எனக் கூற ஒன்றிரண்டு பேரிடம் இருந்து அந்த வியப்பான செய்தி வந்தது. வானில் செவ்வாயைக் காட்டி அங்கிருந்து தான் தாம் எல்லோரும் வந்தவர்கள் என்றும், அந்த விசேட அலங்கார உடையுடன் தான் தாம் பூமியை வந்தடைந்தோம் என்றும் தம் முன்னவர்கள் கூறினார்கள் எனக் கூறினார்கள். தாம் ஏன் வந்தோம், எவ்வளவு காலத்தின் முன் வந்தோம்? ஏன் திரும்பிச் செல்லவில்லை போன்ற பல "ஏன்" கேள்விகட்கு இவர்களால் பதில் சொல்லத் தெரியவில்லை.

ஆக முடிவாக இவர்களது நடவடிக்கைகள், வதிவிடச் சூழல், சிலரது வாய்மொழிப் பதில்கள் இதில் இருந்து ஆய்வாளர்களைச் சில முடிவுக்கு வர வைத்தது. சென்னிறக் கிரகமான செவ்வாயில் இருந்து பல காலங்களுக்கு முன்னர் பூமிக்கு வந்து பின் போக வழி தெரியாமல் அல்லது போக முடியாமல் அல்லது திரும்பிப் போக விரும்பாமல் தங்கிவிட்ட இனம் தான் இந்த செவ்விந்தியர். செந்நிறக் கிரகத்தில் வந்தவர்கள் ஆகையினாலேயே இவர்களது நிறம் சென்னிறமாக உள்ளதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது இது சரிதானா, ஏற்றுக் கொள்ளக் கூடியது தானா? செவ்வாயில் உயிரினம் உண்டா? அல்லது முன் ஒரு காலத்தில் இருந்ததா? எமது பார்வையைக் கொஞ்சம் செவ்வாய்க் கிரகம் நோக்கித் திருப்பிப் பார்ப்போம்.


ஞானம்ஸ் ஸ்ரூடியோ
Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎ (416) 750-8118
2381 EGLINTON AV. E.
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

Safety Truck
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.
We accept Welfare & Unemployment Insurance






தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(13 Years Canadian Experience with Trucks)
Tel: (905) 793-9546 / (416) 616-5979
250 Summerlea Road, Brampton, ON

BALAN APPLIANCES
அனைத்து மின் உபகரணங்களின் திருத்த வேலைகள்
- Stove
- Washer
- Microwave
- Dryer
- Fridge
- Dish Washer
☎: 905-619-3457 Pager: 416-379-1071

தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்
BREAD MASTER BAKERY
பிறட் மாஸ்ரர் பேக்கரி
மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்
றோஸ் பாண் கிடைக்கும்
பாண், பனிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
3 for 0.99¢
வாரத்தில் 7 நாட்களும்
31 TAPSCOTT ROAD, UNIT #B3
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
TEL: (416) 299-5083


தமிழர் நிர்வாகத்தில்

# ஒரு EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது
ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)
5200 FINCH AVE, SCARBOROUGH

☎ 416-412-1793


---

## FAMOUS PLAYERS INDIA THEATRE


22ம் திகதி முதல்

Super Good films VELAVAN FILMS


# விண்ணுக்கும் மண்ணுக்கும்...



